செப்டம்பர் 16, 2024 மலேசியா தினத்திற்கான செய்தி
பேராயர் டாக்டர் சைமன் போவிடமிருந்து,
தலைவர் மலேசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவை
மலேசிய தின வாழ்த்துக்கள்

மலேசியா சில வாரங்களுக்கு முன்புதான் அதன் 25-வது SUKMA விளையாட்டுப் போட்டியின் தொடக்க மற்றும் நிறைவு விழாக்களை மலேசியாவின் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் இனங்கள் ஒன்றிணைவதைக் கொண்டாடும் வகையில், வேற்றுமையில் நமது ஒற்றுமையை பிரதிபலிக்கும் வகையில் கொண்டாடியது. மலேசிய வானொலி தொலைக்காட்சி நிலையம் (RTM) விளையாட்டுகளையும் விழாக்களையும் (புதுமையான 5G-மேம்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி) நேரடியாக ஒளிபரப்பியது. நமது இளம் தலைமுறை மலேசியர்களின் திறமைகளையும் சாதனைகளையும் கண்டுகளிக்க வாய்ப்பாக அமைந்தது.

மேற்கண்ட சுக்மா தொடக்க மற்றும் நிறைவு விழாக்களுக்கு எதிர்மாறாக, கடந்த ஜூலை மாதம் பாரிஸ் நடைபெற்ற ஒலிம்பிக் தொடக்க விழாவானது, அரசியல் மற்றும் சமயத் தலைவர்களால் அவமதிப்பு மற்றும் புண்படுத்தும் வகையில் விமர்சிக்கப்பட்டது. லியோனார்டோ டா வின்சியின் கடைசி இரவு உணவு குறித்த அருவருப்பான சித்தரிப்பு உண்மையில் ஒலிம்பிக்கின் விளையாட்டுகளின் மேன்மை, நட்பு மற்றும் பண்பு ஆகியவற்றை சீர்குலைத்தது. இது ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகளின் முதன்மையான நோக்கமான அனைத்து மனிதகுலத்திற்கும் சிறந்த உலகத்தை உருவாக்க விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் கல்வியை ஊக்குவிப்பதற்கு எதிரானதாகக் கருதப்பட்டது.

பல மலேசியர்கள் சுக்மா விழாக்களை, உளமாரப் பாராட்டினர். பல பார்வையாளர்கள் ஒலிம்பிக் திறப்பு விழாவைக் காட்டிலும் சுக்மாவின் தொடக்க மற்றும் நிறைவு விழாக்கள் போற்றத்தக்கதாக இருந்ததாகவும் "இதிலிருந்து பாரிஸ் கற்றுக்கொள்ள வேண்டும்" என்றும் புகழாரம் சூட்டினார்கள். உண்மையில், மலேசியர்களின் உள்ளங்களைக் கவர்ந்ததோடு, நமது சுக்மா நமது ஒற்றுமையையும் நட்பையும் ஒருங்கேக் கொண்டாடியது எனலாம். இதன்வழி, பல்வேறு கலாச்சார மரபுகளுக்கும் நமது இளம் விளையாட்டு வீரர்களும் உரிய மரியாதையையும் மதிப்பையும் அளித்தது என்று நான் நம்புகிறேன்.

செப்டம்பர் 16 அன்று மலேசியா தினத்தை கொண்டாடும் சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியர்கள், மொத்தத்தில் மலேசியர்களாக இருப்பதன் உண்மையான உணர்வு இவ்வாறுதான் இருக்க வேண்டும். கருப்பொருளான "மலேசியா மடானி: ஜிவா மெர்டேகா", என்பது நிலைக்கட்டும். இது பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் இனங்களைச் சேர்ந்த மலேசியர்களின் ஒருங்கிணைப்பைக் குறிக்கிறது. இது M.A.D.A.N.I என்ற சுருக்கத்தில் கற்பனை செய்யப்பட்டுள்ளது. - ஒவ்வொரு எழுத்தும் மலேசியாவில் நமது அன்றாட வாழ்க்கை முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய முக்கிய மதிப்பைக் குறிப்பதாக உள்ளது.

M	ke**M**ampanan	நிலைத்தன்மை
A	kesej**A**hteraan	செழிப்பு
D	**D**aya cipta	புதுமை
A	horm**A**t	மரியாதை
N	keyaki**N**an	நம்பிக்கை
I	**I**hsan	இரக்கம்

ஜூலை மற்றும் ஆகஸ்ட் ஆகிய இரண்டு மாதங்களாக, சரவாக், சபா மற்றும் தீபகற்ப மலேசியா ஆகியவை தங்கள் சொந்த சுய-ஆட்சி மற்றும் சுதந்திர தினங்களைக் கொண்டாடின. மலேசியா தினத்திற்காக, மலேசிய குடிமக்களாக, முழக்கங்கள் மற்றும் வார்த்தைகளுக்கு அப்பால், உண்மையாக மலேசிய மக்களாக இருப்பதற்காக, நமது ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மை, நெருக்கமான உறவு, ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் அனைத்து சமயங்கள், இனங்கள் மற்றும் கலாச்சாரங்களை மதிக்கும் வகையில், தேசத்தை கட்டியெழுப்புவதற்கு உண்மையாக கைகோர்ப்போம். .

அனைவருக்காகவும்- அரசர்களுக்காகவும் உயர் நிலையிலுள்ளவர்களுக்காகவும் மன்றாடுங்கள்; இறைவனிடம் வேண்டுங்கள்; பரிந்து பேசுங்கள்; நன்றி செலுத்துங்கள். நாம் இறைப்பற்றுடன் புனிதத்துடனும் அமைதியான மற்றும் கண்ணியமான வாழ்க்கையை வாழலாம் (1தீமோ.2:1-2).
61-ம் ஆண்டு மலேசிய தின வாழ்த்துக்கள்

✠ பேராயர் டாக்டர் சைமன் போவிடமிருந்து,
தலைவர் மலேசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவை
THE CATHOLIC BISHOPS' CONFERENCE OF MALAYSIA (CBCM)
APC, 5th Floor, No. 5, Jalan Robertson, off Jalan Pudu, 50150 Kuala Lumpur, Malaysia
Tel: +603-2078 5777 Email: exesec@cbcmsb.org Website: cbcmsb.org